
# திராவிடத்தால் வாழ்கிறோம்

804

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

6

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

# காயிதே மில்லத்தும் அண்ணாவும் டெல்லியில் எழுப்பிய ஒரே குரல்!



1949-ஆம் ஆண்டு, அரசியல் நிர்ணய சபையில், மதராஸ் முஸ்லிம் லீக் சார்பில், காயிதே மில்லத் இவ்வாறாக உரையாற்றினார், “நாட்டின் தேசிய மொழியாகத் தேர்ந் தெடுக்கப்படக்கூடிய மொழி, இந்திய மொழியாக இருக்க வேண்டும் என்பது, ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். அத்துடன் நாட்டின் அதிகப்படியானவர்கள் பேசக்கூடிய மொழியாகவும் இருக்க வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நமது தேசிய மொழி, தற்காலப் போக்கு களையும் நவீன கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் இருக்க வேண்டும் எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவற்றில் முரண்பாடு இல்லை என நான் கருதுகிறேன். அப்படியானால், அப்படிப்பட்ட மொழி எது? எல்லா அம்சங்களிலும் திருப்தி தரும் மொழி எது ? அதுதான் இன்றைய பிரச்சினை” என நீண்ட உரையாற்றினார்.

இந்தி மொழியா, உருதுவா, இந்துஸ்தானியா என நீண்ட அவரது உரையில் இறுதியாகச் சொல்கிறார்.

“இந்த நாட்டினுடைய மிகவும் பழமையான மொழியைத்தான் நமது தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ள முடியும் என்கிற வாதம் ஏற்றுக்கொள்ளப்படுமானால், நான் ஒரு உண்மையை இச்சபை முன்பு தைரியமாகக் கூற விரும்புகிறேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமை யானதும், ஆரம்ப காலத்தில் இருந்து பேசப்பட்டு வரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான்; அதாவது திராவிட மொழிகளே இந்நாட்டின் மூத்த மொழி என நான் துணிந்து கூறுகிறேன்.

இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட முதல் மொழி ‘திராவிட மொழியே’ என்ற எனது கூற்றை எந்த வரலாற்றாசிரியராலும் மறுக்க முடியாது. எந்தப் புதைபொருள் ஆராய்ச்சி யாளராலும் எதிர்க்க முடியாது. உயர்தரமான இலக்கிய வளங்களும் நயங்களும் நிறைந்த மொழி தமிழ். இது மிகவும் மூத்த மொழி. இது எனது தாய்மொழி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மொழியை நான் நேசிக்கிறேன். அம்மொழியைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்.

என்றாலும், ஓர் உண்மையை நானோ அல்லது இதர தமிழர்களோ மறந்துவிடவில்லை. சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் இந்நாட்டின் மிக மூத்த மொழியாக தமிழ் இருந்தபோதிலும், இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களால் இது பேசப்பட வில்லை என்பதால், இம்மொழியைத்தான் நமது தேசிய மொழியாக வேண்டும் என நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கவில்லை; நாங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால், பழமைக்குத்தான் செல்லவேண்டுமென்றால், மூத்த மொழி யைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், இந்நாட்டின் தேசிய மொழியாகத் தமிழைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அம்மொழியைப் பேசுபவர்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்க வில்லை” என அரசியல் நிர்ணய சபையிலேயே வாதிட்டார் காயிதே மில்லத்.

அவர் தனது உரையில் ‘நாங்கள்’ என அழுத்தம் திருத்த மாக முன்வைத்ததுதான் முக்கிய மானது. அன்றைக்கு அவர் இந்திய முஸ்லிம் லீக் பிரதிநிதியாக அவையில் இருந்தாலும், அவர் ஒட்டுமொத்த தமிழர்களின் குரலாக இருந்தார். அன்றைய சூழலில் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறெங்கும் இல்லாத வகையில், இஸ்லாமி யர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையிலான மத நல்லிணக்கத் திற்கும் அந்த ‘நாங்கள்’ மிகப்பெரியச் சான்றாகும். அதற்கு சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்தே பெரியாருடன் கொண்டிருந்த நட்பும், திராவிட இயக்கங்களோடு கொண்டிருந்த உறவும் மிக முக்கிய காரணமாக உள்ளது.

அரசியல் நிர்ணய சபையில், காயிதே மில்லத் அவர்களின் உரை மட்டுமல்ல; முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதே இஸ்லாமியர்களின் குரல் ஓங்கி ஒலித்ததை அறிந்திருப்போம்.

### அடையாளத்தை இழக்கச் செய்யும் மொழி

இந்தி மொழி, தமிழைப் போல, ஆங்கிலத்தைப் போல மற்றொரு மொழியாக மட்டும் இல்லை. அது ஆரியப் பண்பாடு, ஆரிய கலாச்சாரத்தைத் திணித்து, தமிழர்கள் அடையாளத்தை இழக்கச் செய்வதற்கான கருவியாகவே இந்தியைத் திராவிட இயக்கம் கருதியது. அந்தக் கருத்தினையே அரசியல் நிர்ணய சபையில் காயிதே மில்லத் முழங்கினார்.

இந்தி மொழி, ‘இந்துத்துவா’ என்கிற அடையாளத்தை வலிந்து ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான அன்றைய சூழ்ச்சியாகவும் இருந்தது. அதனால்தான், அன்று தமிழ்நாடு எதிர்த்தது. தமிழை மட்டுமல்ல, உருதுவையும் விழுங்கிச் செரிக்கப் பார்க்கிறது இந்தி என்ற அச்சவுணர்வு அன்றைக்கு இஸ்லாமியர் களிடத்திலும் இருந்தது.

உருதுவை நசுக்க, இந்தியை ஏவுகிறது காங்கிரஸ் என்று இந்திய தேசிய முஸ்லிம் லீக் கடுமையாக எதிர்த்தது. பள்ளிகளில் முஸ்லிம் குழந்தைகளுக்கு இந்தியை அறிமுகப்படுத்த, காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகளை “ஆரிய மதத்தை எங்கள் மீது திணிப்பதற்கான வலுக்கட்டாய முயற்சி இது” என்று முகமது அலி ஜின்னா எதிர்த்தார்.

தெற்கே தமிழர்கள் ஒலித்த அதே குரலை, வடக்கே முஸ்லிம் லீக்கும் முழங்கியது. அகில இந்திய முஸ்லிம் லீக்கின் கண்ணோட்டத்தில், தமிழ்நாடு முஸ்லிம் லீக் தங்களின் தாய்மொழியான தமிழையும் இணைத்துக்கொண்டனர். தமிழையும், உருதுவையும் ஒருசேர உயர்த்திப் பிடித்தனர்.

ஆனால், இஸ்லாமியர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு பெறுவதை காங்கிரஸ் விரும்பவில்லை. இந்தியை ‘இந்தி’ என்று சொல்லாமல் இந்துஸ்தானி மொழி என்று இஸ்லாமியர்கள் மனதை மாற்ற முயற்சித்தது. இந்துஸ்தானியை இஸ்லாமியர்கள் கற்பதன் மூலம் இந்து-முஸ்லிம் ஒற்றுமை மேலோங்கும் என்றது.

ஆனால், தமிழ்நாட்டு இஸ்லாமியர்கள் காங்கிரஸின் இந்தப் பிரச்சாரத்திற்கு இரையாகவில்லை. இந்தியைக் கற்பதன் மூலம் இந்து-முஸ்லிம் ஒற்றுமை மேலோங்கும் என்ற கருத்தை தமிழ் இஸ்லாமியர்கள் நம்பத் தயாராக இல்லை. அதுமட்டுமில்லாமல் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கான வலியுறுத்தல் தேவையும் தமிழ்நாட்டில் எழவில்லை.

தமிழ்நாட்டில் மொழியே முதன்மை அடையாளமாகவும், மதம் அடுத்த இடத்திலும் தான் இருந்தன. அதிலும் தமிழ்நாட்டு இந்துக்களுக்கு மத அடையாளம் பிரதானமாக இல்லை. இந்துக்களுக்கு சாதியை கடந்த அடையாளமாகவும், இஸ்லாமியர்களுக்கு மதத்தைக் கடந்த அடையாளமாகவும் தமிழ் இருந்தது. அதனால், இந்தி எங்கள் பண்பாட்டை, எங்கள் அடையாளத்தை அழிக்கப் பார்க்கிறது என உறுதியோடு தமிழ் இஸ்லாமியர்களும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

### முதல் இந்தி எதிர்ப்பு போர்

குறிப்பாக, முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்ற ஆயிரக்கணக்கானோரை அன்றைய ராஜாஜி அரசு கைது செய்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் சட்டமன்ற விவாதத்தில் கலிஃபுல்லா பேசும்போது, “மக்கள் விருப்பத்திற்கு மாறாக, இந்தியைத் திணிப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த மரியாதைக்குரிய அவையில் காங்கிரஸ்காரர்களுக்கு நான் ஒரு சவால் விடுகிறேன். இந்த அவையில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் யாருக்காவது துணிச்சல் இருந்தால், உங்கள் பதவியை ராஜினாமா செய்யுங்கள், நானும் ராஜினாமா செய்கிறேன்.

அப்படி ராஜினாமா செய்யும் உறுப்பினர் அவருடைய சொந்தத் தொகுதியிலேயே போட்டியிடட்டும். அவரை எதிர்த்து, நான் போட்டியிடுகிறேன். 99 சதவிகித வாக்குகள் பெற்று அவரை நான் வீழ்த்துவேன்” என்று ஆக்ரோஷமாகப் பேசினார். ஒரு காங்கிரஸ்காரர் கூட கலிஃபுல்லாவின் சவாலை ஏற்கத் துணியவில்லை. ஏனெனில், இந்தி எதிர்ப்புக் களம் அப்படி இருந்தது.

1937 காலகட்டத்தில் கலிஃபுல்லா, எந்த மக்களின் பிரதிநிதியாக மதராஸ் மாகாண அவையில் இருந்தாரோ, 1949-இல் அதே மக்களின் பிரதிநிதியாக அரசியல் நிர்ணய சபையில், அதே கருத்தை வலியுறுத்தினார் காயிதே மில்லத். பின்னாட்களில் காயிதே மில்லத் வைத்த அதே கருத்தைத்தான், “காக்கையை தேசியப் பறவையாக அறிவிக்க லாமே” என மாநிலங்களவையில் உரத்துப் பேசினார் பேரறிஞர் அண்ணா.

> **இந்தியைக் கற்பதன் மூலம் இந்து-முஸ்லிம் ஒற்றுமை மேலோங்கும் என்ற கருத்தை தமிழ் இஸ்லாமியர்கள் நம்பத் தயாராக இல்லை.**

...நீளும்

---

## வாழ்க தலைவர்!

மாநில சட்டமன்றம் அனுப்பும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தராததை எதிர்த்து, தி.மு.க. அரசு தொடர்ந்த வழக்கில், 10 மசோதாக்களுக்கும் உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்துள்ளது.

“சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை நிறுத்திவைக்க ஆளுநருக்கு அதிகாரமில்லை, மாநில அரசைப் பின்பற்றித்தான் ஆளுநர் செயல்பட முடியும். தன்னிச்சையாகச் செயல்படக்கூடாது” என்று ஆளுநர்களுக்குக் கடிவாளம் போட்டுள்ளது உச்சநீதிமன்றம். மாநில அரசை விருப்பம் போல கலைத்த ஒன்றிய அரசுக்கு, 1994-இல் ‘எஸ்.ஆர்.பொம்மை வழக்கு’ கடிவாளம் போட்டதைப் போல, ஆளுநர்களின் எதேச்சதிகாரப் போக்குக்குக் கடிவாளம் போடும் தீர்ப்பாக, தமிழ்நாடு அரசின் வழக்கு அமைந்துள்ளது” என சட்டநிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு குறித்து, தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்ட தி.மு.க. செய்தித்தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, “ராஜ்பவன் அதிகாரத்திடம் இருந்து இந்திய மாநிலங்களை விடுதலை செய்து, வரலாற்றில் நெடிந்துயர்ந்து நிற்கிறார், தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ஆளுநருக்கு எதிரான தி.மு.க. அரசின் வழக்கு, இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களையும் ஆளுநர்களின் கொடுங்கரங்களில் இருந்து விடுதலை செய்துள்ளது.

இந்திய அரசியல் சாசன சபை, மாநிலங்களுக்கு இழைத்த அநீதியை, 75 ஆண்டுகால துரோகத்தை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில சட்டமன்றங்களைத் துச்சமெனக் கருதி செயல்பட்ட, டெல்லி அதிகாரத்தை உடைத்து எறிந்துள்ளது தி.மு.கழகம். பிஸ்வந்த் தாஸ், சிப்பன் லால் சக்சேனா, பேரா.கே.சந்தானம் தொடங்கி, மாநில உரிமைகளுக்காக அரசியல் நிர்ணய சபையில் பேசிய அத்தனை குரல்களுக்கும் குறைந்தபட்ச நியாயம் பெற்றுத்தரப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் கண்ட கனவுகளையும், நடத்திய போராட்டங் களையும் அர்த்தப்படுத்தியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மாநில சுயாட்சி வரலாற்றில் மகத்தான நாள் இது. அண்ணா கண்ட இயக்கம், அவர் இலட்சியத்தை ஈடேற்றியுள்ளது. வாழ்க தலைவர்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### வாஞ்சையுடன் பெற்ற வாழ்த்து!



எம்.லியாகத் அலி

2005-ஆம் ஆண்டு கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் சென்று சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது உள்ளே சென்றதும் “வாய்யா” என்று வாஞ்சையுடன் அழைத்து நலம் விசாரித்தார். அவரது கரங்களைப் பற்றி வாழ்த்துப் பெற்று வீடு திரும்பினேன். என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத புகைப்படங்களுள் இதுவும் ஒன்று.

– எம்.லியாகத் அலி,
மாவட்டக் கழகப் பொருளாளர்,
புதுக்கோட்டை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கரு வூலம்

### ஆளுநருக்குக் கண்டன நாள்!

1952-ஆம் ஆண்டு, சென்னை ஆளுநராக ஒரு வடநாட்டுத் தலைவர் நியமிக்கப்பட்டதற்கு, எதிராகக் தி.மு.கழகம், கடும் கண்டனங்களைப் பதிவு செய்தது. ‘வடநாட்டு ஆதிக்கம் கூடாது’. ‘கவர்னர் நியமனம் கூடாது – கவர்னர்களும் பொதுமக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்’ என்பதை வலியுறுத்தி, அந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கண்டன நாள் கூட்டங்களை நடத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131